# கற்றல் விளைவுகள் - வகுப்பு : 6

## தமிழ்

**T-601** குழந்தை பல வகையான ஒலிகளை (மழை, தென்றல், தொடர் வண்டி, பேருந்து மற்றும் தெரு வியாபாரிகள் எழுப்பும் ஓசைகள்) தங்கள் சொந்த மொழியிலும் விரும்பும் வகையிலும் கேட்டுச் சுவைத்திடல், இன்புறுதல் ( பேச்சு மொழி, சைகைமொழி).

**T-602** தாங்கள் பார்த்த, கேட்ட உள்ளூர் சமூக நிகழ்வுகள், செயல்பாடுகள், சடங்குகள் போன்றவற்றைப் பற்றித் தயக்கமின்றி வினா எழுப்பவும், கலந்துரையாடவும் செய்தல்.

**T-603** மாணவர்கள், தாம் படித்த, பார்த்த நிகழ்வுகள் மீதான கட்டுரைகள் எழுதுதல், கேட்ட தலைப்புகள் பற்றித் தங்களின் சொந்த நடையில் கருத்துகளை முன்னெடுத்துச் செல்லல், கதைகளை நீட்டித்தல் போன்றவற்றைச் செய்தல்.

**T-604** வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள் போன்றவற்றில் தாங்கள் கேட்ட, பார்த்த, படித்த செய்திகளைத் தங்களின் சொந்த மொழிநடையில் கூறுதல்.

**T-605** பல்வேறு சூழல்களில் பிறரால் சொல்லப்பட்ட சொற்களைத் (பார்வையிழந்தவரின் பயண அனுபவங்கள் போன்றவை) திரும்பக் கூறல்.

**T-606** தங்கள் பகுதிகளில் காணப்படும் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் நாட்டுப்புறப்பாடல்களை அறிந்திருத்தல் அவற்றைப் பற்றிக் கலந்துரையாடல்.

**T-607** மற்றவர்களின் மொழிகள் உணவுப் பழக்கங்கள், வாழ்க்கை நிலை அவற்றில் காணப்படும் வேற்றுமைகள், அவை தன்னுடையதிலிருந்து வேறுபட்டுள்ளமை பற்றிப் பேசுதல்.

**T-608** ஒரு நூலை ஆழ்ந்து படித்து அந்நூலின் மையக்கருத்தை ஊகித்தறிதல்.

**T-609** மிகநுட்பமாக ஒரு நூலை ஆய்ந்து, குறிப்பிட்ட செய்திகளைத் தேடிக்கண்டு பிடித்தல், ஊகித்தறிதல் மற்றும் முடிவு செய்தல்.

**T-610** பல்வேறு பாடப்பொருள்கள் பற்றித் தமிழில் உள்ள பனுவல்களை (செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், கதைகள், இணையத்தில் தகவல் தரும் பகுதிகள் போன்றவற்றில் இருந்து) படித்துப் புரிந்துகொண்டு, அவற்றின் மீதான கருத்துரைகளைப் பகிர்தல் , தங்களின் விருப்புவெறுப்புகளை வெளிப்படுத்துதல்.

**T-611** ஒலியியைபு, சந்தம் முதலான யாப்பமைதிக் கூறுகள், மரபுத்தொடர்கள் போன்ற மொழியின் மரபு, நடை, நுட்பங்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, கதைகள், கட்டுரைகளின் நயம் பாராட்டல்.

**T-612** பல வடிவங்களில் எழுதப்பட்ட இலக்கியப் பாடப்பகுதிகளை உரிய ஒலிப்புமுறை, குரல் ஏற்ற இறக்கம் ஆகியவற்றோடு ஒப்புவித்தல்.

**T-613** வெவ்வேறு வகையான கட்டுரைகளைப் படித்தல்.

**T-614** புதிய சொற்களை தெரிந்துகொள்வதில் பேரார்வத்தை வெளிப்படுத்தல், அகராதிகளைப் பார்த்து அவற்றின் பொருளைப் புரிந்துகொள்ள முயலுதல்.

**T-615** கைத்தொழில், கட்டடவியல், உழவுத்தொழில், நாட்டியம் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் மொழியின் தனிச்சிறப்புகளை அறிந்துகொள்ள பேரார்வத்தை வெளிப்படுத்தல், அவற்றின்நயங்களைப் பாராட்டுதல்.

**T-616** மற்றவர்களின் அனுபவங்களைத் தேவைக்கு ஏற்ப / தேவை ஏற்படும்போது எழுதுதல் (தெருக்குழாய்கள், முதன்மைச் சாலைகளின்சந்திப்புகள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற பொது இடங்களில் நடக்கும் நிகழ்வுகள், கேட்ட பேச்சுகள் ஆகியன.)

**T-617** செய்தித் தாள்கள், இதழ்கள், கதைகள் இணையத்தில் காணப்படும் தகவல்கள், கட்டுரைகள் போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொண்டு தமது விருப்பு வெறுப்புகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்துதல் (பொது எழுத்துமுறை அல்லது பிரெய்லி எழுத்துமுறை)

**T-618** பல்வேறு நோக்கங்களுடன் பல்வேறு தலைப்புகளில் சரியான நிறுத்தக்குறிகளுடன் எழுதுதல்.

**T-619** பல்வேறு சூழல்களில் / நிகழ்வின்போது மற்றவர்கள் கூறியவற்றைத் தமது சொந்த மொழியில் எழுதுதல்.

**T-620** பல இதழ்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் எழுதும்போது சரியான சொற்கள், தொடர்கள், சொற்றொடர்கள், மரபுத்தொடர்கள் (phrases) ஆகியவற்றைப் பயன்படுத்தி எழுதுதல்

## ENGLISH

**E-601** Participates in activities in English like role play, group discussion, debate, etc..

**E-602** Recites and shares poems, songs, jokes, riddles, tongue twisters, etc.

**E-603** Responds to oral messages, telephonic communication in English and Communicates them in English for home language.

**E-604** Responds to announcements and instructions made in class, school assembly, railway station and in other public places.

**E-605** Reads a variety of text in English / Brailly and identifies main ideas, characters, sequence of ideas and events and relates with his / her personal experiences.

**E-606** Reads to seek information from notice board, newspaper, internet, tables, charts, diagrams and maps etc..

**E-607** Responds to a variety of questions on familiar and unfamiliar text verbally and in writing.

**E-608** Uses synonyms, antonyms appropriately deduces word meanings from clues in context while reading a variety of texts.

**E-609** Writes words / phrases / simple sentences and short paragraphs as dictated by the teacher.

**E-610** Uses meaningful sentences to describe / narrate factual / imaginary situations in speech and writing.

**E-611** Refers to dictionary to check meanings and spellings, and to suggested website for information.

**E-612** Writes grammatically correct sentences for a variety of situations, using noun, pronoun, verb, adverb, determiners, etc.

**E-613** Draft, revises and writes short paragraphs based on verbal, print and visual clues.

**E-614** Writes coherently with focus on appropriate beginning, middle and end in English / Braille

**E-615** Writes messages, invitations, short paragraphs and letters (formal and informal) and with a sense of audience.

**E-616** Visits a language laboratory.

**E-617** Writes a book review.

## கணிதம்

**M-601** பெரிய எண்களைக் கொண்ட கணக்குகளை அடிப்படைச் செயல்பாடுகள் (கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்) வாயிலாகத்தீர்த்தல்.

**M-602** ஒற்றைப்படை, இரட்டைப்படை, பகு எண், பகா எண் போன்ற எண்களின் வகைப்பாடுகளைக் கண்டுணர்ந்து (அமைப்புமுறை மூலம்) அவற்றைப் போற்றுதல்.

**M-603** குறிப்பிட்ட சூழலில் மீபொ.வ அல்லது மீசி.ம. பயன்படுத்துதல்.

**M-604** முழுக்களில் கூட்டல் மற்றும் கழித்தல் முறைகளைப் பயன்படுத்தித் தீர்வு காணல்.

**M-605** பணம், நீளம், வெப்பநிலை போன்றவை பயன்படும் பல்வேறு சூழல்களில் பின்னங்கள் மற்றும் தசம எண்களைப் பயன்படுத்துதல்.

**M-606** அன்றாட வாழ்க்கைச் சூழல்களில் சந்திக்கும் பின்னங்கள் மற்றும் தசமங்கள் சார்ந்த கூட்டல், கழித்தல் வாயிலாகத் தீர்வு காணல்.

**M-607** கொடுக்கப்பட்ட சூழலைப் பொதுமைப்படுத்த பல்வேறு செயல்பாடுகளுடன் மாறியைப் பயன்படுத்துதல் எ.கா: பக்க அளவுகளான- $x$ அலகுகள் மற்றும் 3 அலகுகள் கொண்ட செவ்வகத்தின் சுற்றளவு $2(x+3)$ அலகுகள் ஆகும்.

**M-608** பல்வேறு சூழல்களில் விகிதங்களைப் பயன்படுத்தி அளவுகளை ஒப்பிடுதல் எ.கா. ஒரு வகுப்பில் உள்ள மாணவ மாணவிகளின் விகிதம் 3:2.

**M-609** பல்வேறு வாக்கியக் கணக்குகளை ஒருறுப்பு மாறி முறையைப் பயன்படுத்தித் தீர்த்தல். எ.கா: ஒரு டஜன் புத்தகங்களின் விலை கொடுக்கப்பட்டால், 7 புத்தகங்களின் விலையைக் கணக்கிட, முதலில் ஒரு புத்தகத்தின் விலையைக் கணக்கிட்டு, பின்: அதனைக் கொண்டு 7 புத்தகங்களின் விலையைக் கணக்கிடல்.

**M-610** சுற்றுப்புறத்தில் காணும் எடுத்துக்காட்டுகளைக் கொண்டு, கோடு, கோட்டுத் துண்டு, திறந்த மற்றும் மூடிய உருவங்கள், கோணம், முக்கோணம், நாற்கரம், வட்டம் போன்ற வடிவியல் கருத்துக்களை விளக்குதல்.

**M-611** கீழ்க்காண்பனவற்றைக் கொண்டு கோணங்களைப் புரிந்துகொள்ளச் செய்துகாட்டுதல். சுற்றுப்புறத்தில் கோணங்களுக்கான எடுத்துக்காட்டுகளை அடையாளம் காணுதல்.

**M-612** கோணங்களை அவற்றின் அளவுகளைக் கொண்டு வகைப்படுத்துதல்.

**M-613** $45^\circ$, $90^\circ$ மற்றும் $180^\circ$ ஆகியவற்றை அடிப்படைக் கோண அளவுகளாகக் கொண்டு கோண அளவுகளை மதிப்பிடுதல்.

**M-614** கீழ்க்காண்பனவற்றைக் கொண்டு சமச்சீர்க்கோடு சார்ந்த புரிதலை விளக்குதல், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சமச்சீர்க் கோடுகளில் சமச்சீர்த்தன்மை கொண்ட இருபரிமான சமச்சீர் வடிவங்களை அடையாளம் காணுதல்.

**M-615** சமச்சீரான இருபரிமாண வடிவங்களை உருவாக்குதல்.

**M-616** முக்கோணங்களை அவற்றின் பக்கங்களின் அடிப்படையிலும், கோணங்களின் அடிப்படையிலும் வகைப்படுத்துதல். எ.கா: பக்கங்களின் அடிப்படையில் அசமபக்க முக்கோணம், சமபக்க முக்கோணம் அல்லது இரு சமபக்க முக்கோணம் போன்றவை.

**M-617** பக்க அளவுகள் மற்றும் கோணங்களின் அடிப்படையில் நாற்கரத்தை வகைப்படுத்துதல்

**M-618** தன்னைச் சுற்றி அமைந்துள்ள பொருள்களில் கோளம், கன சதுரம், கன செவ்வகம், உருளை, கூம்பு போன்ற முப்பரிமாண (3D) வடிவங்களை அடையாளம் காணுதல்.

**M-619** முப்பரிமாண (3D) உருவங்களின் விளிம்புகள், முனைகள் மற்றும் பக்கத்திற்கான எடுத்துக்காட்டுகளை அளித்து விளக்குதல்.

**M-620** சுண்ணக்கட்டிப் பெட்டியின் மேற்பரப்பு, வகுப்பறையின் தரைப்பரப்பு போன்ற சுற்றுப்புறத்தில் உள்ள செவ்வக வடிவிலான பொருள்களின் சுற்றளவையும், பரப்பளவையும் கண்டறிதல்.

**M-621** கடந்த 6 மாத காலத்தில் ஒரு குடும்பத்தின் பல்வேறு இனங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினக்கணக்குகள் போன்ற கொடுக்கப்பட்ட / சேகரிக்கப்பட்ட தகவல்களை அட்டவணை படவிளக்கப்படம் மற்றும் பட்டை விளக்கப்படம் வடிவில் அமைத்தல் மற்றும் விளக்குதல்.

## அறிவியல்

**S-601** தோற்றம், தன்மை, பணிகள் போன்ற உற்றுநோக்கக் கூடிய மற்றும் நறுமணம் போன்ற நுகரக்கூடிய பண்புகளின் அடிப்படையில் தாவர நார்கள், மலர்கள், போன்ற பொருள்கள் மற்றும் உயிரினங்களை இனங்காணல்.

**S-602** பண்புகள், கட்டமைப்பு மற்றும் பணிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இழை மற்றும் நூல், ஆணிவேர் மற்றும் சல்லிவேர், மின்கடத்திகள் மற்றும் மின்கடத்தாப் பொருள்கள் போன்ற பொருள்களையும் உயிரினங்களையும் வேறுபடுத்துதல்.

**S-603** பொருள்களைக் கரையும் பொருள்கள், கரையாப் பொருள்கள்; ஒளி ஊடுருவும், ஒளிகசியும், மற்றும் ஒளிபுகாப் பொருள்கள்; மாற்றங்களை மீள்மாற்றம் மற்றும் மீளாமாற்றம்; தாவரங்களைச் சிறு செடிகள், புதர்ச்செடிகள், மரங்கள், படர்கொடிகள், ஏறுகொடிகள்; வாழிடத்தின் உட்கூறுகளை உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகள் ; இயக்கத்தினை நேரான இயக்கம், வட்ட இயக்கம், கால ஒழுங்கு இயக்கம் போன்ற உற்றுநோக்கக்கூடிய பண்புகளின் அடிப்படையில் பொருள்கள், உயிரினங்களை வகைப்படுத்துதல்.

**S-604** எளிய பரிசோதனைகளை மேற்கொண்டு வினாக்களுக்கான விடைகளைக் கண்டறிதல். எ.கா., கால்நடைத் தீவனத்தில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகள் யாவை? அனைத்து இயற்பியல் மாற்றங்களும் மீள் மாற்றங்களா? தனித்துத் தொங்கவிடப்பட்ட காந்தம் ஒரு குறிப்பிட்ட திசையில் நிற்குமா?

**S-605** செயல்கள் மற்றும் நிகழ்வுகளைக் காரணங்களோடு தொடர்புபடுத்துதல். எ.கா., ஊட்டச்சத்துக் குறைபாட்டு நோய்களை உணவுடனும், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தகவமைப்புகளை அவற்றின் வாழிடத்துடனும் , காற்றின் தன்மையை மாசுப்பொருள்களுடனும் தொடர்புபடுத்துதல்.

**S-606** செயல்கள் மற்றும் நிகழ்வுகளை விளக்குதல். எ.கா. தாவர நார்களைப் பதப்படுத்துதல்; தாவர மற்றும் விலங்குகளின் அசைவு மற்றும் இடப்பெயர்ச்சி; நிழல்கள் உருவாதல்; சமதள ஆடியில் ஒளி எதிரொளிப்பு; காற்றின் பகுதிப் பொருளில் உள்ள வேறுபாடுகள்; மண்புழு உரம் தயாரித்தல் போன்றவை.

**S-607** இயற்பியல் அளவைகளை அளவிட்டு, SI அலகுகளில் தெரிவித்தல், எ.கா. நீளம்.

**S-608** படங்களைப் பாகங்கள் குறித்து வரைதல் / உயிரினங்களின் செயல்பாடுகளைச் செயல் வரைபடமாக வரைதல், எ.கா., மலர்களின் பாகங்கள், மூட்டுகள், வடிகட்டுதல், நீர்ச்சுழற்சி போன்றவை.

**S-609** சுற்றுப்புறத்தில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி மாதிரிகளை உருவாக்கி அவை செயல்படும் விதத்தை விவரித்தல், எ.கா. ஊசித்துளைக் காமிரா, பெரிஸ்கோப், மின்சார டார்ச் விளக்கு போன்றவை.

**S-610** கற்றுக்கொண்ட அறிவியல் கருத்துகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல், எ.கா., சரிவிகித உணவிற்கு ஏற்ற உணவுகளைத் தேர்ந்தெடுத்தல்; பொருள்களைப் பிரித்தல்; பருவகாலத்திற்கு ஏற்ற ஆடைகளைத் தேர்ந்தெடுத்தல்; திசைகளை அறிய காந்த ஊசியைப் பயன்படுத்துதல், பெருமழை மற்றும் வறட்சியை எதிர்கொள்ளும் வழிமுறைகளை எடுத்துரைத்தல்.

**S-611** சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொள்ளல், எ.கா., உணவு, நீர், மின்சாரம் ஆகியவை வீணாவதையும் கழிவுப் பொருள்கள் உருவாதலையும் குறைத்தல்; மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வைப் பரப்புதல்; தாவரங்களைப் பராமரித்தல் போன்றவை

**S-612** கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி வடிவமைத்தல், திட்டமிடுதல் போன்றவற்றில் படைப்பாற்றலை வெளிப்படுத்துதல்.

**S-613** நேர்மை, புறவயத்தன்மை, ஒத்துழைப்பு, பயம் மற்றும் பாரபட்சம் கொள்ளாது இருத்தல் போன்ற விழுமங்களை வெளிப்படுத்துதல்.

## சமூக அறிவியல்

**SS-601** நட்சத்திரங்கள், கோள்கள் மற்றும் துணைக்கோள்களை வேறுபடுத்துதல். (எ.கா.) சூரியன், பூமி, மற்றும் நிலவு

**SS-602** உயிருள்ள பொருள்கள் உள்ளதால் பூமி தனித்துவமிக்க வானியல் உறுப்பு என்பதையும், உயிர்க்கோளம் அடிப்படையில் பூமியின் பகுதிகளை அடையாளம் காணுதல்.

**SS-603** இரவு, பகல் மற்றும் பருவக்காலங்களைச் செய்துகாட்டுதல்.

**SS-604** தட்டையான பரப்பில் திசைகளைக் குறித்துக் காட்டுதல், உலக வரைபடத்தில் கண்டங்கள், பெருங்கடல்களைக் குறித்தல்.

**SS-605** அட்சரேகைகள் மற்றும் தீர்க்கரேகைகளை அடையாளம் காணல். (எ.கா.) உலக வரைபடம் மற்றும் உலக உருண்டை மாதிரியில் துருவங்கள், நிலநடுக்கோடு, பூமியின் மையப் பகுதி, இந்திய மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் மற்றும் பிற அண்டை நாடுகளை அடையாளம் காணல்.

**SS-606** இந்திய வரைபடத்தில் இயற்கை அமைப்புகளான மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், நதிகள், பாலைவனம் போன்றவற்றைக் குறித்தல்.

**SS-607** மரபுசார்ந்த குறியீடுகளின் உதவியுடன் அளவைகள், திசைகள் மற்றும் பண்புகளைக் காட்டும் அருகாமைப்பகுதியின் வரைபடத்தினை வரைதல்.

**SS-608** கிரகணங்கள் தொடர்பான மூடநம்பிக்கைகளைக் கூர்ந்து ஆராய்தல்.

**SS-609** பல்வேறு வகையான சான்றுகளை (தொல்பொருள் சான்றுகள், இலக்கியச் சான்றுகள் முதலியன) அடையாளம் காணுதல். அக்கால வரலாற்றை மறுகட்டமைப்புச் செய்திட இச்சான்றுகளின் பயன்பாட்டினை விவரித்தல்.

**SS-610** இந்தியப் புறவரி வரைபடத்தில் முக்கிய வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களைக் குறித்தல்.

**SS-611** ஆதிமனிதப் பண்பாடுகளின் தனித்துவமிக்க பண்புகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றின் வளர்ச்சியை விவரித்தல்.

**SS-612** முக்கியப் பேரரசுகள் மற்றும் வம்சங்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை எடுத்துகாட்டுகளுடன் பட்டியலிடுதல். உதாரணமாக அசோகரின் கல்வெட்டுகள், குப்தர்களின் நாணயங்கள், பல்லவர்களின் இரதக் கோயில்கள் முதலியன.

**SS-613** பழங்காலத்தில் ஏற்பட்ட பரந்த முன்னேற்றங்களை விளக்குதல். (எ.கா) வேட்டையாடி - உணவு சேகரித்தல் நிலை, வேளாண்மையின் தொடக்கம், சிந்து சமவெளியில் தோன்றிய முதல் நகரங்கள் மற்றும் ஓர் இடத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினை மற்றொரு இடத்தில் ஏற்பட்ட வளர்ச்சியோடு தொடர்புபடுத்துதல்.

**SS-614** அக்காலத்தில் இலக்கியப் படைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான நபர்கள் நிகழ்வுகள், பிரச்சினைகளை விவரித்தல்.

**SS-615** இந்தியாவுடன் ஏற்பட்ட தொடர்பினால் இந்தியாவின் வெளிப்பகுதிகளில் மதம், கலை, கட்டடக் கலை போன்ற துறைகளில் ஏற்பட்ட தாக்கங்களை விளக்குதல்.

**SS-616** பண்பாடு மற்றும் அறிவியலில் இந்தியாவின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை எடுத்துக்காட்டாக வானவியல், மருத்துவம், கணிதம், உலோகங்கள் பற்றிய அறிவு போன்றவற்றை எடுத்துக்கூறுதல்.

**SS-617** பல்வேறு வரலாற்று முன்னேற்றங்கள் தொடர்பான தகவல்களைத் தொகுத்தல்.

**SS-618** பண்டைக் காலத்தில் தோன்றிய பல்வேறு மதங்கள் மற்றும் சிந்தனைகளின் அடிப்படைக் கருத்துகள் மற்றும் மதிப்புகளைப் பகுப்பாய்வு செய்தல்.

**SS-619** தம்மைச் சுற்றிக் காணப்படும் மனிதனின் பல்வேறு வகையான பன்முகத் தன்மையினை விவரித்தல்.

**SS-620** அவன்/அவளைச் சுற்றியுள்ள பல்வேறு வகையான பன்முகத்தன்மை பற்றி ஆரோக்கியமான மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளுதல்.

**SS-621** பல்வேறு வகையான பாகுபாடுகளை அடையாளம் காணுதல். பாகுபாட்டின் இயல்பு மற்றும் அதன் மூலங்களைப் புரிந்துகொள்ளுதல்.

**SS-622** ஒருவரை நன்முறையில் நடத்த பல்வேறு பரிமாணங்களில் நிகழும் சமத்துவம் மற்றும் சமத்துவமின்மையினை வேறுபடுத்துதல்.

**SS-623** அரசின் பங்களிப்பை, குறிப்பாக உள்ளூர் அளவில் அதன் பங்களிப்பை விவரித்தல்.

**SS-624** அரசின் பல்வேறு நிலைகளான உள்ளாட்சி, மாநில, மத்திய அரசுகளை அடையாளம் காணுதல்.

**SS-625** கல்வி மற்றும் உடல்நலம் சார்ந்த துறைகளில் கிராம மற்றும் நகர்ப்புற, உள்ளாட்சி அரசு அமைப்புகள் செயல்படும் விதத்தினை விவரித்தல்.

**SS-626** கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு தொழில்கள் அமைவதற்கான காரணிகளை விவரித்தல்.

ஆக்கம் : D.LAKSHMIGANDHAN, BT (MATHS), PUMS-RADHAPURAM, THANDARAMPET BLOCK, TIRUVANNAMALAI Dt .

# கற்றல் விளைவுகள் - வகுப்பு : 7

## தமிழ்

**T-701** வெவ்வேறு பாடப் பொருள்களைப் படிக்கவும் அவற்றைக் குழுக்களில் கலந்துரையாடவும் செய்தல்.

**T-702** ஒன்றைப் படிக்கும்போது அந்தப் படைப்பாளி வேறு சூழல்களில் வெளியிட்ட சிந்தனைகளைப் புரிந்துகொள்ள முயற்சி செய்தலும், அக்கருத்துகள்களை த் தமது சொந்த கருத்துக்களுடனும், அனுபவங்களுடனும் ஒப்பிட்டு, தமது குறிப்பிட்ட கருத்துடன் படைப்பாளி ஒன்றுபடுதலையும் மாறுபடுதலையும் அறிதல்.

**T-703** தாம் பார்த்த ஓவியம் அல்லது காட்சியின் அனுபவத்தைத் தம் சொந்தச் சொற்களில் / சைகை மொழியில் வெளிப்படுத்தல்.

**T-704** தாங்கள் படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்து அவற்றின்மீதான வினாக்கள் எழுப்புதல், கருத்தாடலைத் தொடங்கிவைத்தல் ஆகியவற்றின் மூலம் தங்களின் புரிதலை மேம்படுத்துதல்.

**T-705** தாங்கள் வாழும் சமூகம் அல்லது நிலப்பகுதிகள், நாட்டுப்புற இலக்கியங்கள், பாடல்கள் பற்றிக் கலந்துரையாடி அவற்றின் நயம் பாராட்டுதல்.

**T-706** பல்வேறு கலைகளில் ( கைத்தொழில், கட்டிடக்கலை, உழவுத்தொழில், நாட்டியம் போன்றவை) பயன்படுத்தப்படும் சொற்கள் பற்றி அறிய பேரார்வம் கொண்டு அவற்றைப் புரிந்துகொள்ள முயலுதல்.

**T-707** மழைக்காலங்களில் பசுமையான சூழலை ஏற்படுத்துதல்' போன்ற உள்ளூர் / சமூகம் / இயற்கை சார்ந்த தலைப்புகள் அல்லது பிரச்சினைகள் தொடர்பாக தங்கள் தருக்கவியல் முடிவுகளை அளித்தல்.

**T-708** வெவ்வேறான உணர்ச்சிகரமான பாடப்பொருள் / பிரச்சனைகள் (சாதி, மதம், நிறம், பாலினம் சடங்குகள் போல்வன) மீது காரண கரிய அடிப்படையில் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்துதல்.

**T-709** ஒன்றைப் படித்து முழுமையான பொருண்மையை உணர்ந்து அதன் பயன்பாட்டினைக் கூறுதல்.

**T-710** பாடப்பொருள் ஒன்றை நுட்பமாக நன்கு ஆய்ந்து அதில் சில சிறப்புக் கூறுகளைத் தேடிக் கண்டறிதல்.

**T-711** படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்து வினாக்கள் எழுப்பி அவற்றை மேலும் சிறப்பாகப் புரிந்துகொள்ள முயலுதல்.

**T-712** பல்வேறு வகை படித்தலுக்கான செயல்பாடுகளில் அமைந்துள்ள வெவ்வேறு சொற்கள், சொற்றொடர்கள், சொல்வடைகள் ஆகியனவற்றையும் புரிந்துகொண்டு நயம் பாராட்டுதல்.

**T-713** பல்வேறு கதைகள் / பாடல்களைப் படித்துப் பல்வேறு வகையான முறைகளையும் நடைகளையும் (வருணனை, உணர்வு சார்ந்தவை, இயற்கை வருணனை போன்றவை) இனங்காணல்.

**T-714** படிக்கும்போது வகுப்புத் தோழர்கள் மற்றும் ஆசிரியர்கள் உதவியுடன் பாடப்பொருள்களைப் புரிந்துகொள்வதுடன், அகராதிகள், பார்வை நூல்கள், வரைபடங்கள், இணையத்தளம் அல்லது பொருள்கள் ஆகியவற்றின் துணை கொண்டு பொருண்மையைத் தெளிவாக அறிதல்.

**T-715** பல்வேறு கலைகளிலும், தொழில்களிலும் (கைத்தொழில், கட்டடக்கலை, உழவு, நாட்டியம் முதலானவை) பயன்படுத்தும் மொழி பற்றிய கருத்தை ஆர்வமாக வெளிப்படுத்தல்.

**T-716** மொழி மரபின் நுட்பமான பயன்பாட்டுக் கூறுகளையும், பாடல்களில் படித்த ஒரு குறிப்பிட்ட சொல், சொற்றொடர்கள் போன்றவற்றின் பொருண்மை உணர்ந்து அவற்றையும் தமது உரையாடலில் வெளிப்படுத்துதல்.

**T-717** வெவ்வேறு சூழல்களில் மற்றவர்களால் கூறப்பட்ட சொற்களை [முறை சார்ந்த அல்லது தனி முறையிலான கூட்டங்கள் அல்லது நிகழ்வுகளின்போது வயதில் பெரியவர்கள் பயன்படுத்திய சொற்கள், தச்சர், குயவர், துணிதுவைப்பவர், முடிதிருத்துவோர் போன்ற தொழிலாளிகளுடன் பெரியவர்கள் உரையாடும்போது கேட்ட சொற்கள்] வேறு சூழல்களில் தாம் விரும்பியவாறு எழுதுதலில் பயன்படுத்தப்படுகிறது.

**T-718** பல்வேறு செய்திகள் குறித்து செய்தித்தாள்கள், இதழ்கள், கதைகள், தகவல் கையேடுகள், இணையவழி நூல்கள் ஆகியவற்றைப் படித்தும், பார்த்தும் கிடைத்த புரிதலைக் கொண்டு, அவை பற்றிய தங்களின் விருப்புவெறுப்புகளை முன்னெடுத்துச் செல்லுதல் (பிரெய்லி எழுத்து அல்லது பொது எழுத்து முறைமையில்).

**T-719** தனிப்பட்ட அனுபவங்களைச் சொந்த நடையில் தமது மொழியில் வெளிப்படுத்துதல்.

**T-720** பல்வேறு பாடப்பொருள்களைப் பல்வேறு நோக்கங்களுக்காக எழுதும்பொழுது, பொருத்தமான சொற்கள், தொடரமைவுகள், சொற்றொடர், மரபுத்தொடர், நிறுத்தக்குறிகள் மற்றும் பிற இலக்கணக் கூறுகளைப் (காலம்,பெயரடை,இணைச்சொற்கள்) பொருத்தமாகப்பயன்படுத்துதல்.

**T-721** சாதி, மதம், நிறம், பாலினம், சடங்குகள், பழக்கவழக்கங்கள் போன்ற உணர்வுப்பூர்வமான சிக்கல்களில் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துதல்.

**T-722** பள்ளி / வகுப்பறை / சுவரொட்டிகளுக்காகச் செய்திகள் சேகரித்தல், உருவாக்குதல் அவற்றினைத் தொகுத்தல்.

## ENGLISH

**E-701** Answers questions orally and in writing on a variety of texts

**E-702** Reads aloud stories and recites poems with appropriate pause, intonation and pronunciation

**E-703** Participates in different activities in English such as role play, poetry recitation, skit, drama, debate, speech, elocution, declamation, quiz, etc., organised by school and other such organisations

**E-704** Engages in conversations in English with family, friends, and people from different professions such as shopkeeper, salesperson etc. using appropriate vocabulary

**E-705** Responds to different kinds of instructions, requests, directions in varied contexts viz. school, bank, railway station

**E-706** Speaks about excerpts, dialogues, skits, short films, news and debate on TV and radio, audio-video programmes on suggested websites

**E-707** Asks and responds to questions based on texts (from books or other resources) and out of curiosity

**E-708** Reads textual/non-textual materials in English/Braille with comprehension

**E-709** Identifies details, characters, main idea and sequence of ideas and events in textual / non-textual material

**E-710** Thinks critically, compares and contrasts characters, events, ideas, themes and relates them to life

**E-711** Reads to seek information in print / online, notice board, signboards in public places, newspaper, hoardings ete,

**E-712** Takes notes while teacher teaches /from books / from online materials.

**E-713** Infers the meaning of unfamiliar words by reading them in context

**E-714** Refers dictionary, thesaurus and encyclopaedia to find meanings / spelling of words while reading and writing

**E-715** Reads, a variety of texts for pleasure e.g. adventure stories and science fiction, fairy tales, biography, autobiography, travelogue etc. (extensive reading)

**E-716** Uses appropriate grammatical forms in communication (e.g. noun, pronoun, verb, determiners, time and tense, passivisation, adjective, adverb, etc)

**E-717** Organises sentences coherently in English / in Braille with the help of verbal and visual clues and with a sense of audience

**E-718** Writes formal letters, personal diary list, email, SMS, etc.

**E-719** Writes descriptions / narratives showing sensitivity to gender, environment and appreciation of cultural diversity

**E-720** Writes dialogues from a story and story from dialogues

**E-721** Visits a language laboratory.

**E-722** Writes a Book Review.

## கணிதம்

**M-701** இரு முழுக்களின் பெருக்கல்/ வகுத்தல்

**M-702** பின்னங்களின் பெருக்கல் மற்றும் வகுத்தலின் பொருளுணர்தல்

**M-703** எடுத்துக்காட்டாக : . $\frac{2}{3}$ x. $\frac{4}{5}$ ஐ. $\frac{2}{3}$ ன் . $\frac{4}{5}$ மடங்கு மேலும் . $\frac{1}{2} \div \frac{1}{4}$ என்பதை எத்தனை $\frac{1}{4}$ சேர்த்து $\frac{1}{2}$ யினை உருவாக்கும் என்று பொருளுணர்தல்.

**M-704** பின்னங்கள் மற்றும் தசம எண்களின் பெருக்கல் மற்றும் வகுத்தலை மேற்கொள்ளும் படிநிலைகளைப் பயன்படுத்துதல்.

**M-705** அன்றாடச் சூழலில் விகிதமுறு எண்களின் பயன்பாடு சார்ந்த கணக்குகளுக்குத் தீர்வுகாணுதல்.

**M-706** மிகப் பெரிய எண்களின் பெருக்கல் மற்றும் வகுத்தல் சார்ந்த கணக்குகளுக்கு எண்களின் அடுக்குத் தொடர் விதியினைப்பயன்படுத்துதல்.

**M-707** அன்றாட வாழ்வியல் சூழ்நிலைகளை எளிய சமன்பாடாக அமைத்துத் தீர்வு காணுதல்.

**M-708** இயற்கணிதக் கோவைகளைக் கூட்டுதல் மற்றும் கழித்தல்.

**M-709** விகிதங்களில் அமைந்துள்ள அளவுகளை வேறுபடுத்துதல். எ.கா. $\frac{15}{45}$ என்பதும் , $\frac{40}{120}$ என்பதும் சமம் என்பது போல 15,45,40,120 என்பதும் ஆகியன விகிதத்தில் அமைந்துள்ளன என்று கூறுதல்.

**M-710** சதவீதத்தைப் பின்னமாகவும், தசம எண்ணாகவும் மாற்றுதல் மற்றும் பின்னம், தசம எண்களைச் சதவீதமாக மாற்றுதல் சார்ந்த கணக்குகளுக்கு தீர்வு காணுதல்.

**M-711** தனி வட்டிக்கான வட்டி சதவீதம், இலாபம், நட்ட சதவீதத்தைக் கணக்கிடுதல்.

**M-712** பண்புகளின் அடிப்படையில் கோண ஜோடிகளை நேர்கோணம், நிரப்புக்கோணம், மிகை நிரப்புக்கோணம், அடுத்துள்ள கோணம் மற்றும் குத்தெதிர்க்கோணம் என வகைப்படுத்தி, ஒரு குறிப்பிட்ட கோணம் கொடுக்கப்பட்டால், மற்ற கோணத்தினைக் கண்டறிதல்.

**M-713** இரு கோடுகளைக் குறுக்கு வெட்டியால் வெட்டும்போது, உருவாகும் கோண இணைகளின் பண்புகளைச் சரிபார்த்தல்.

**M-714** ஒரு முக்கோணத்தின் இரு கோணங்கள் கொடுக்கப்பட்டால், தெரியாத மூன்றாவது, 'கோணத்தைக் கண்டறிதல்.

**M-715** கொடுக்கப்பட்ட முக்கோணங்களின் தகவல்களான ப-ப-ப, ப-கோ-ப, கோ-ப-கோ, செ-க-ப ஆகியவற்றின் அடிப்படையில் முக்கோணங்களின் சர்வசமத் தன்மையை விளக்குதல்.

**M-716** அளவுகோல் மற்றும் கவராயத்தினைப்பயன்படுத்தி வெளியேயுள்ள புள்ளி வழிச்செல்வதும் கொடுக்கப்பட்ட கோட்டிற்கு இணையானதுமான கோடு மற்றும் முக்கோணங்களை உருவாக்குதல்.

**M-717** ஓரலகு சதுரங்கள், புள்ளி கட்டத்தாள்/ வரைபடத்தாளைப் பயன்படுத்தி மூடிய வடிவங்களின் தோராய பரப்பளவைக் கண்டறிதல்,

**M-718** ஒரு சதுரம் மற்றும் ஒரு செவ்வகத்தின் மூடிய பகுதியின் பரப்பளவைக் கணக்கிடுதல்.

**M-719** அன்றாட வாழ்க்கைச் சூழல்களிலிருந்து எளிய தரவுகளுக்கான சராசரி, இடைநிலை, முகடு போன்ற பல்வேறு மதிப்புகளைக்.கண்டறிதல்.

**M-720** வகுப்பு மாணவர்களின் உயரங்களில், வேறுபாடு மற்றும் நாணயத்தைச் சுண்டுதல் போன்ற நிகழ்வுகளின் நிச்சயமில்லாத்தன்மை போன்ற அன்றாட வாழ்க்கைச் சூழலில் உள்ள மாறுபடும் தன்மையை அடையாளம் காணுதல்.

**M-721** மின்சாரத்தின் பயன்பாடு கோடைக்காலத்தை விட குளிர்காலத்தில் அதிகம், ஓர் அணி 10 ஓவர்களில் பெற்ற ரன்கள் போன்றவற்றைச் செவ்வக விளக்கப் படத்தின் மூலம் குறித்துப்பொருளுணர்தல்..

## அறிவியல்

**S-701** தோற்றம், தன்மை, பணிகள் போன்ற உற்றுநோக்கக்கூடிய பண்புகளின் அடிப்படையில் தாவர நார்கள், பற்களின் வகைகள், ஆடிகள் மற்றும் லென்சுகள் போன்ற பொருள்கள் மற்றும் உயிரினங்களை இனங்காணல்.

**S-702** பல்வேறு உயிரினங்களில் செரித்தல், ஒரு பால் இரு பால் மலர்கள் வெப்பக் கடத்திகள் மற்றும் கடத்தாப் பொருள்கள்; அமில, கார மற்றும் நடுநிலைத் தன்மையுடைய பொருள்கள், ஆடிகள் மற்றும் லென்சுகளால் உருவாக்கப்படும் பிம்பங்கள் போன்றவற்றின் பண்புகள் , அமைப்பு மற்றும் செயல்கள் அடிப்படையில் பொருள்களையும் உயிரினங்களையும் வேறுபடுத்துதல்.

**S-703** பண்புகள் / குணங்களின் அடிப்படையில் பொருள்களையும் உயிரினங்களையும் வகைப்படுத்துதல். எ. கா., தாவர மற்றும் விலங்கு இழைகள், இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள்.

**S-704** எளிய பரிசோதனைகளை மேற்கொண்டு வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிதல். எ.கா., வண்ண மலர்களின் சாற்றினை அமில-கார நிறங்காட்டியாகப் பயன்படுத்த முடியுமா? பச்சை நிறத்தில் இல்லாத இலைகளும் ஒளிச் சேர்க்கை செய்கின்றனவா? வெள்ளொளி பல்வேறு நிறங்களின் சேர்க்கையா?

**S-705** செயல்கள் மற்றும் நிகழ்வுகளை காரணங்களோடு தொடர்புபடுத்துதல். எ.கா., காற்றழுத்தத்துடன் காற்றின் வேகம், மண் வகைகளும் அவற்றில் வளரும் பயிர்களும், மனிதர் செயல்பாடுகளும் நிலத்தடி நீர்மட்டம் குறைதலும் போன்றவை.

**S-706** செயல்கள் மற்றும் நிகழ்வுகளை விளக்குதல், எ.கா., விலங்குகளின் நார்களைப் பதப்படுத்துதல், வெப்பம் கடத்தப்படும் முறைகள், மனித மற்றும் தவரணக்களின் உறுப்புகளும் உறுப்பு மண்டலங்களும், மின்னோட்டத்தின் வெப்ப, காந்த விளைவுகள் போன்றவை.

**S-707** வேதி வினைகளுக்கான சொற்சமன்பாடுகளை எழுதுதல், எ.கா. அமில-கார வினைகள். அரித்தல், ஒளிச்சேர்க்கை, சுவாசித்தல் போன்றவை.

**S-708** வெப்ப நிலை, நாடித்துடிப்பு, நகரும் பொருள்களின் வேகம், தனி ஊசலின் அலைவு நேரம் போன்றவற்றை அளந்து கணக்கீடுசெய்தல்.

**S-709** பாகங்களுடன் படங்கள் / செயல் வரைபடங்கள் வரைதல், எ.கா., மனிதன், தாவரங்களின் உறுப்பு மண்டலங்கள், மின்சுற்றுகள், பரிசோதனை வடிவமைப்புகள், பட்டுப்பூச்சியின் வாழ்க்கைச்சுழற்சி போன்றவை.

**S-710** வரைபடங்களில் குறித்தல் மற்றும் விளக்குதல், எ.கா., தொலைவு -நேரம் வரைபடம்.

**S-711** சுற்றுப்புறத்தில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி மாதிரிகளை உருவாக்கி அவை செயல்படும் விதத்தை விவரித்தல். எ.கா., இதயத்துடிப்பளவி (stethoscope); காற்றழுத்தமானி, மின் காந்தங்கள்; நியூட்டனின் வண்ண வட்டு போன்றவை.

**S-712** அறிவியல் கண்டுபிடிப்புகளின் கதைகள் குறித்து கலந்துரையாடல் மற்றும் போற்றுதல்.

**S-713** கற்றுக்கொண்ட அறிவியல் கருத்துகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல், எ.கா., அமிலத் தன்மையைக் கையாளுதல்; மண்ணைப் பரிசோதனை செய்து, வளப்படுத்துதல்; மண் அரிப்பைத் தடுக்கும் வழிமுறைகளைக் கையாளுதல்; உடல இனப்பெருக்கம் வாயிலாகச் சாகுபடி செய்தல்; இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்கலங்களைச் சரியான வரிசையில் கருவிகளுடன் இணைத்தல்; பேரிடர்களின் போதும் அவற்றிற்குப் பிறகும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; மாசுற்ற நீரை மறுசுழற்சி செய்வதற்கான முறைகளைப் பரிந்துரைத்தல் போன்றவை.

**S-714** சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொள்ளல், எ.கா., பொது இடங்களில் சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான சிறந்த நடைமுறைகளைக் கடைப்பிடித்தல்; மாசுப் பொருள்களின் உருவாக்கத்தினைக் குறைத்தல்; மண் அரிப்பைத் தடுக்க மரம் வளர்த்தல் ; இயற்க்கை வளங்களின் அளவுக்கதிகமான பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகளை மற்றவர்களுக்கு உணர்த்துதல் போன்றவை.

**S-715** கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி வடிவமைத்தல், திட்டமிடுதல் போன்றவற்றில் படைப்பாற்றலை வெளிப்படுத்துதல்.

**S-716** நேர்மை, புறவயத்தன்மை, ஒத்துழைப்பு, பயம் மற்றும் பாரபட்சம் கொள்ளாது இருத்தல் போன்ற விழுமங்களை வெளிப்படுத்துதல்.

## சமூக அறிவியல்

**SS-701** புவியின் உள்ளடுக்குகள், பாறை வகைகள் வளிமண்டல அடுக்குகளை வரைபடத்தில் அடையாளம் காணுதல்.

**SS-702** உலக வரைபடம் அல்லது உலக உருண்டை மாதிரியில் பல்வேறு காலநிலை மண்டலங்களின் பரவலைக் குறித்துக்காட்டுதல்.

**SS-703** நிலநடுக்கம், வெள்ளம், வறட்சி போன்ற பேரிடர் நிகழ்வுகளின் தடுப்பு நடவடிக்கைகளை விளக்குதல்.

**SS-704** பல்வேறு காரணிகளால் உருவாகும் நில அமைப்புகளை விவரித்தல்.

**SS-705** வளிமண்டலத்தின் அமைப்பு மற்றும் அதன் பகுதிப் பொருள்களை விளக்குதல்.

**SS-706** சுற்றுச் சூழலின் பல்வேறு கூறுகளையும் அவற்றிற்கு இடையேயுள்ள தொடர்பினையும் விவரித்தல்.

**SS-707** சுற்றுப்புறப் பகுதிகளில் மாசுபடுதலுக்கான காரணிகளைப் பகுப்பாய்வு செய்து அவற்றை தடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பட்டியலிடுதல்.

**SS-708** பல்வகைத் தன்மையுடைய தாவரங்கள் மற்றும் விலங்குகள் காணப்படுவதற்கான காரணங்கள் மற்றும் கரணிகளைக் கண்டறிதல். (எ.கா. காலநிலை, நில அமைப்புகள் போன்றவை)

**SS-709** பேரிடர்கள் மற்றும் அழிவுகள் ஏற்படுவதற்கான காரணிகளைப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துதல்.

**SS-710** காற்று, நீர், ஆற்றல், தாவரங்கள் மற்றும் விலங்குகள் போன்ற இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கான தேவையை உணர்ந்து வெளிப்படுத்துதல்.

**SS-711** இந்தியா உட்பட உலகின் பல்வேறு காலநிலை மண்டலங்களுக்கும் அங்கு வாழும் வாழ்க்கைக்கும் இடையே உள்ள தொடர்பைக்கண்டறிதல்.

**SS-712** குறிப்பிட்ட பகுதிகளில் முன்னேற்றத்தைப் பாதிக்கும் காரணிகளைப் பகுப்பாய்தல்.

**SS-713** வரலாற்றில் பல்வேறு காலங்களைக் கண்டறியப் பயன்படும் ஆதாரங்களின் எடுத்துக் காட்டுகளை அளித்தல்.

**SS-714** இடைக்காலத்தில் ஓர் இடத்தில் ஏற்பட்ட முக்கிய வரலாற்று நிகழ்வுகளை மற்றொரு இடத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளோடு தொடர்புபடுத்துதல்.

**SS-715** மக்களின் வாழ்க்கைமுறைக்கும், அவர்கள் வாழும் இடத்தின் புவியியல் அமைப்பிற்குமான தொடர்பினை விவரித்தல். (எ.கா) பழங்குடியினர், நாடோடி மேய்ப்பர்கள்.

**SS-716** இடைக்காலத்தில் நிகழ்ந்த சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்தல்.

**SS-717** பல்வேறு பேரரசுகள் மேற்கொண்ட நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டு உத்திகளைப் பகுப்பாய்தல் (எ.கா. கில்ஜி, துக்ளக், முகலாயர்கள் போன்றோர்).

**SS-718** பல்வேறு அரசர்களின் கொள்கைகளை ஒப்பிடுதல்

**SS-719** கோவில்கள்கல்லறைகள் மற்றும் மசூதிகள் கட்ட பயன்படுத்தப்பட்ட அமைப்பு மற்றும் தொழில் நுட்பத்தின் தனித்துவ வளர்ச்சியினை எடுத்துக்காட்டுடன் விவரித்தல்.

**SS-720** புதிய சமயச் சிந்தனைகள் மற்றும் இயக்கங்கள் உருவாகக் காரணமாக இருந்த காரணிகளைப் பகுப்பாய்தல். (பக்தி, மற்றும் சூஃபி)

**SS-721** பக்தி மற்றும் சூஃபி சமயத் துறவிகளின் பாடல்களில் இருந்து அப்போது நிலவிய சமூக அமைப்பினைக் கண்டறிந்து பொருளுணர்தல்.

**SS-722** மக்களாட்சியில் சமத்துவத்தின் முக்கியத்துவத்தை விளங்குதல்.

**SS-723** அரசியல் சமத்துவம், பொருளாதார சமத்துவம் மற்றும் சமூக சமத்துவத்தினை வேறுபடுத்துதல்.

**SS-724** ஒருவர் வாழும் பகுதிகளில் காணப்படும் சமத்துவ உரிமை தொடர்பான சமூக அரசியல், பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளைக் கண்டறிந்து பொருளுணர்தல்.

**SS-725** உள்ளாட்சி அரசினை மாநில அரசுடன் வேறுபடுத்துதல்.

**SS-726** சட்ட மன்றத்திற்கான தேர்தல்முறையை விவரித்தல்.

**SS-727** மாநில / யூனியன் பிரதேச சட்டமன்றத் தொகுதியின் நில வரைபடத்தில் ஒருவரின் சொந்த தொகுதியைக் குறித்துக் காட்டி அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரின் பெயரைக் கூறுதல்.

**SS-728** பல்வேறு சமூகப் பிரிவுகளில் உள்ள பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கான காரணங்கள் மற்றும் அவற்றின் விளைவுகளைப் பகுத்தாய்தல்

**SS-729** இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு துறைகளில் சாதித்த பெண் சாதனையாளர்களை அடையாளம் காணுதல்.

**SS-730** பல்வேறு துறைகளில் பெண்கள் ஆற்றிய பங்களிப்பை உரிய ஆதாரங்களுடன் விளக்குதல்.

**SS-731** ஊடகங்களின் செயல்பாடுகளைப் பொருத்தமான செய்தித்தாள் சான்றுகளுடன் விளக்குதல்.

**SS-732** ஒரு விளம்பரம் தயாரித்தல்.

**SS-733** பல்வேறு வகையான சந்தைகளை வேறுபடுத்திக் காட்டுதல்.

**SS-734** பல்வேறு வகையான சந்தை பகுதிகளுக்கு எவ்வாறு பொருள்கள் எடுத்துச்செல்லப்படுகின்றன என்பதை கண்டறிதல்.

ஆக்கம் : D.LAKSHMIGANDHAN, BT (MATHS), PUMS-RADHAPURAM, THANDARAMPET BLOCK, TIRUVANNAMALAI Dt .

# கற்றல் விளைவுகள் - வகுப்பு : 8

## தமிழ்

**T-801** மாணவர்கள் பல்வேறு வகையான தலைப்புகளில் பாடப் பொருள்களின் மீது எழுதப்பட்டவற்றைப் படித்துக் கலந்துரையாடச் செய்தல் (பாடப்பகுதியில் உள்ள ஒரு குறிப்பிட்ட பறவையின் விவரிப்புடன், பறவைகள் பற்றிய ஆய்வாளரான சலிம் அலியின் புத்தகத்தைத் தொடர்புபடுத்திக் கூறல்.)

**T-802** செய்தித்தாள்கள், இதழ்கள், கதைகள், தகவல் பகுதிகள் இணையம் போன்றவற்றில் தமிழில் உள்ள பல்வேறு வகை எழுத்துகளைப் படித்துப் புரிந்துகொண்டு, அவற்றின் மீது கருத்துரை பகர்தல், முடிவு கூறல் மற்றும் விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்துதல் (வாய்மொழி வழி அல்லது சைகை வழி)

**T-803** படித்தவற்றைப் பற்றிச் சிந்தனை செய்து வினாக்கள் எழுப்பிப் புரிதலை மேம்படுத்திக் கொள்ளல்.

**T-804** தமது சுற்றுப்புறத்தில் வழங்குகின்ற நாட்டுப்புற பாடல்கள், நாட்டுப்புறக்கதைகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுதல்.

**T-805** எதையும் படித்து முடித்த பின்னர், தமக்குத் தெரியாத சூழல்கள் / நிகழ்வுகள் பற்றிக் கற்பனை செய்து புதிய மனப்பிம்பங்களையும் சிந்தனைகளையும் உருவாக்கி வெளிப்படுத்துதல் (வாய்மொழி வழி / சைகை மொழியில்).

**T-806** சாதி, மாதம், நிறம், பாலினம், மரபுகள் போல்வன குறித்த உணர்வுப்பூர்வமான சிக்கல்கள் பற்றி நண்பர்கள் ஆசிரியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் வினாக்கள் எழுப்புதல் (எ.கா. ஒரு குறிப்பிட்ட விழா கொண்டாடப்படும் முறை பற்றிப் பேசுதல்).

**T-807** கதைகள், பாடல்கள், கட்டுரைகள், அறிக்கைகள், நினைவுகள், நகைச்சுவை போன்ற பல்வேறு வகைப்பட்டவற்றைப் படிக்கும்போது அவற்றை நுட்பமாக ஆய்வு செய்து சில குறிப்பிட்ட செய்திகளைக்கண்டறிதலும் ஊகித்தறிதலும்.

**T-808** ஒரு கட்டுரையைப் படித்த பின்னர் அதன் சமூக மதிப்புகள் குறித்துக் கலந்துரையாடல், சில வினாக்களுக்கு விடை காண முற்படல். (எ.கா.) தனது சுற்றுப்புறத்தில் வாழும் குடும்பங்கள் பற்றிச் சிந்தித்தல்: இதன்தொடர்ச்சியாக, ராமு மாமாவின் பெண் குழந்தை ஏன் பள்ளிக்குச் செல்லவில்லை? என்ற வினாவை எழுப்புதல்.

**T-809** படித்தனவற்றைப் பற்றி நன்கு சிந்தித்துப் புரிதலை மேலும் சிறப்பாக்குதல்.

**T-810** பல்வேறு வகை படித்தல் பொருட்களில் காணப்படும் சொற்கள், தொடர்கள் மரபுத்தொடர்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு நயம் பாராட்டுதல்.

**T-811** படித்த பிறகு பல்வேறு எழுத்தியல் நடைகளையும் முறைகளையும் (விவரண முறை, வரைபடமுறையில் உணர்ச்சிப் பூர்வமான நடை, இயற்கை அழகின் வருணனை முறை போன்றவை) இனங்காணுதல்.

**T-812** படிக்கும்போது படைப்பாளியின் சொற் சித்திரத்தினை நயம்படப்பாராட்டித் தமது கல்வி நிலைக்கு ஏற்ப அதை வெளிப்படுத்தல் (பேச்சு எழுத்து, பிரெய்லி எழுத்து, சைகை மொழி வழியில்)

**T-813** தேவைப்படின் பார்வை நூல்களாகிய அகராதிகள், தேசப்படங்கள், கலைக்களஞ்சியம் போன்றவற்றையும், இணையத்தளத்தையும் பொருத்தமான முறையில் பயன்படுத்துதல். பிறர் உதவியை நாடியும் இதனைச் செய்யலாம்.

**T-814** தான் எழுதுவதைப் படிப்பவர் மற்றும் எழுத்தின் நோக்கம் ஆகியவற்றை மனதில் கொண்டு பயன் விளைவிக்கும் வகையில் எழுதுதல்.

**T-815** தாம் அறிந்திராத சூழல்களைப் பற்றிக்கற்பனை செய்தும் நிகழ்வுகள் பற்றி மனத்தில் உருவகித்தும் அவற்றைப் பற்றிச் சிந்தித்தும் எழுத்து வழி வெளிப்படுத்தல். (பிரெய்லி முறைமை வழியும்),

**T-816** மொழி பற்றிய நுட்பங்களை அறிந்து அவற்றைத் தம் மொழியில் எழுதும்போது பயன்படுத்துதல். (சொற்களை மாற்றுவதன் மூலம் பாடலின் சந்தத்தில் ஏற்படும் ஓசை நயத்தைப் புரிந்துகொள்ளுதல்)

**T-817** மற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட சூழலில் சொன்ன சொற்களைப் பிறிதொரு சூழலில் தனது மொழிநடையில் பயன்படுத்துதல். (பள்ளி நிகழ்வுகள் விழாக்கள் பற்றி அறிக்கை தயார் செய்தல், கிராமச் சந்தையில் கடைக்காரருடன் வாடிக்கையாளர் உரையாடுதல்)

**T-818** தமது சொந்த அனுபவங்களைத் தமக்கே உரிய மொழிநடையைப் பயன்படுத்தி வெவ்வேறு இலக்கிய வடிவங்களில் எழுதுதல் (கதை, கட்டுரை, பாடல் வடிவில் அனுபவங்களை வெளிப்படுத்துதல்)

**T-819** அன்றாட வாழ்வில் நிகழும் குறிப்பிடத்தக்க அனுபவங்களை (நிகழ்வுகள், சூழல்கள்) புத்தாக்க முறையில் வெவ்வேறு வழிகளில் (சமூக ஊடகங்கள், நோட்டு புத்தகம், பதிப்பாளருக்கு கடிதம் எழுதுதல்) எழுதுதல்.

**T-820** கைவினைப் பொருட்கள் தயாரித்தல்,கட்டடக்கலை, உழவுத் தொழில், விதைவிதைத்தல், நாட்டியம், மெய்ப்பாடுகள் முதலான செயல்பாடுகளில் பயன்படும் சொற்களைப் பயன்படுத்தி எழுதுதல்.

**T-821** படிப்பவரின் தரம், எழுத்தின் நோக்கம் ஆகியவற்றை மனத்திற்கொண்டு பயன் விளையுமாறு தன்னைத்தானே வெளிப்படுத்துதல்.

**T-822** பாடல், கட்டுரை, கதை எழுதும்போது, பல்வேறு புலப்பாட்டு உத்திகளையும் முறைகளையும் இனம்கண்டு அவற்றைப் பயன்படுத்துதல்

**T-823** தாம் படிக்கும் முன்னர் அறிந்திராத சூழல்கள், நிகழ்வுகள் ஆகியன பற்றிக் கற்பனை செய்து அவற்றை மனப் படிமங்களாகவும், சிந்தனையாகவும் மாற்றி வெளிப்படுத்துதல் (பொது எழுத்து, பிரெய்லி எழுத்துவழி).

## ENGLISH

**E-801** Responds to instructions and announcements in school and public places viz. railway station, market, airport, cinema hall, and act accordingly.

**E-802** Introduces guests in English, interviews people by asking questions based on the work they do.

**E-803** Engages in conversations in English with people from different professions such as bank staff, railway staff, etc. using appropriate vocabulary.

**E-804** Uses formulaic / polite expressions to communicate such as 'May I borrow your book?', 'I would like to differ' etc.

**E-805** Speaks short prepared speech in morning assembly.

**E-806** Speaks about objects / events in the class / school environment and outside surroundings.

**E-807** Participates in grammar games and kinaesthetic activities for language learning.

**E-808** Reads excerpts, dialogues, poems, commentaries of sports and games, speeches, news, debates on TV, Radio and expresses opinions about them,

**E-809** Asks questions in different contexts and situations ( e.g. based on the text / beyond the text / out of curiosity / while engaging in conversation using appropriate vocabulary and accurate sentences)

**E-810** Participates in different events such as role play, poetry recitation, skit, drama, debate, speech, elocution, declamation, quiz, etc., organised by school and other such organizations;

**E-811** Narrates stories (real or imaginary) and real life experiences in English.

**E-812** Interprets quotations, sayings and proverbs.

**E-813** Reads textual/non-textual materials in English/Braille with comprehension,

**E-814** Identifies details, characters, main idea and sequence of ideas and events while reading.

**E-815** Reads, compares, contrasts, thinks critically and relates ideas to life.

**E-816** Infers the meaning of unfamiliar words by reading them in context.

**E-817** Reads a variety of texts for pleasure e.g. adventure stories and science fiction, fairy tales, also non-fiction articles, narratives, travelogues, biographies, etc. (extensive reading)

**E-818** Refers dictionary, thesaurus and encyclopaedia as reference books for meaning and spelling while reading and writing.

**E-819** Prepares a write up after seeking information in print / online, notice board, newspaper, etc.

**E-820** Communicates accurately using appropriate grammatical forms (e.g., clauses, comparison of adjectives, time and tense, active passive voice, reported speech ete.)

**E-821** Writes a coherent and meaningful paragraph through the process of drafting, revising, editing and finalising.

**E-822** Writes short paragraphs coherently in English/Braille with a proper beginning, middle and end with appropriate punctuation marks.

**E-823** Writes answers to textual/non-textual questions after comprehension / inference; draws character sketch, attempts extrapolative writing.

**E-824** Writes email, messages, notice, formal letters, descriptions/ narratives, personal diary, report, short personal/ biographical experiences etc.

**E-825** Develops a skit (dialogues from a story) and story from dialogues.

**E-826** Visits a language laboratory,

**E-827** Writes a Book Review.

## கணிதம்

**M-801** விகிதமுறு எண்களின் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய செயல்பாடுகளின் பண்புகளை அமைப்பு முறைகள் வழியே பொதுமைப்படுத்துதல்.

**M-802** இரண்டு விகிதமுறு எண்களுக்கு இடையே உள்ள எண்ணற்ற விகிதமுறு எண்களைக் காணல்

**M-803** 2,3,4,5,6,9, மற்றும் 11 இன் வகுபடும் தன்மைக்கான விதிகளை நிரூபித்தல்.

**M-804** வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்தி எண்களின் வர்க்கம், வர்க்க மூலம், கனம் மற்றும் கன மூலம் ஆகியவற்றைக் கண்டுபிடித்தல்.

**M-805** அடுக்குத்தொடர் சார்ந்த கணக்குகளைத் தீர்த்தல்.

**M-806** மாறிகளைப் பயன்படுத்தி அன்றாட வாழ்க்கைக் கணக்குகளையும், புதிர்களையும் தீர்த்தல்.

**M-807** இயற்கணிதக்கோவைகளை பெருக்குதல்.
எகா : விரிவாக்கு (2 x 5 ) (3 x 2 +7)

**M-808** பல்வேறு இயற்கணித முற்றொருமைகளைப் பயன்படுத்தி, அன்றாட வாழ்வின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல்.

**M-809** சதவீதம் என்ற கருத்தினைத் தள்ளுபடி, மதிப்புக் கூட்டுவரி மற்றும் கூட்டு வட்டி கணக்கிடுதலில் ஏற்படும் இலாப நட்டச் சூழலில் பயன்படுத்துதல். (எ-கா.) குறித்தவிலை மற்றும் தள்ளுபடி மதிப்பு ஆகியவை கொடுக்கப்பட்டால் தள்ளுபடி சதவீதம் காணுதல் (அல்லது) வாங்கியவிலை இலாப சதவீதம் காணல்.

**M-810** நேர்மாறல், எதிர்மாறல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கணக்குகளுக்குத் தீர்வு காணல்.

**M-811** கோணங்களின் கூடுதல் பண்பினைப் பயன்படுத்தி நாற்காரங்களில் கோணங்கள் சார்ந்த கணக்குகளுக்குத் தீர்வு காணல்.

**M-812** இணைகரத்தின் பண்புகளை சரிபார்த்தல் மற்றும் அவற்றிற்கிடையேயான தொடர்புகளைக் காரணகாரியத் தொடர்பு மூலம் நிரூபித்தல்.

**M-813** சமதளப் பரப்புகளான காகிதம், கரும்பலகை போன்றுவத்தில் முப்பரிமாண வடிவங்களைக் காட்டுதல்.

**M-814** அமைப்பு முறையின் வழியே யூலரின் தொடர்பை சரிபார்த்தல்.

**M-815** கவராயம் மற்றும் மூலைமட்டம் கொண்டு வெவ்வேறு நாற்கரங்களை உருவாக்குதல்.

**M-816** வரைபடத்தாள் / அலகு சதுரங்களைக் கொண்டு சரிவகம் வடிவங்களின் பரப்பை கணக்கிடுதல். மற்றும் பரப்பிற்கான வாய்ப்பட்டைக் கொண்டு அதனை சரிபார்த்தல்.

**M-817** பலகோண வடிவங்களின் பரப்பைக் காணல்.

**M-818** கன செவ்வக மற்றும் உருளை வடிவப்பொருளின் மேற்பரப்பு மற்றும் கனஅளவினைக் காணல்.

**M-819** செவ்வக விளக்கப்படம் மற்றும் வட்டவிளக்கப்படம் வரைதல் மற்றும் பொருளுணர்தல்.

**M-820** அதிக எண்ணிக்கையிலான ஒத்த பகடைகளை / நாணயங்களை வீசுதல் போன்றவற்றின் தரவுகள் அல்லது எதிர்கால நிகழ்வுகளின் வாய்ப்புகள் சார்ந்த கருதுகோள்களை உருவாக்குதல்.

## அறிவியல்

**S-801** இயற்கை மற்றும் செயற்கை இழைகள்; தொடுவிசை மற்றும் தொடாவிசைகள்; மின்கடத்தி மற்றும் மின்காப்புத் திரவங்கள்; தாவர மற்றும் விலங்கு செல்கள்; குட்டி ஈனும் மற்றும் முட்டையிடும் விலங்குகள், போன்ற உயிரினங்களையும் பொருள்களையும் அவற்றின் பண்புகள், அமைப்பு, மற்றும் செயல்களின்அடிப்படையில் வேறுபடுத்துதல்.

**S-802** பண்புகள் / குணங்களின் அடிப்படையில் பொருட்களையும், உயிரினங்களையும் வகைப்படுத்துதல். எ.கா., உலோகங்கள் மற்றும் அலோகங்கள்; கோடைகால மற்றும் குளிர்காலப் பயிர்கள்; நன்மை பயக்கும் மற்றும் தீமைபயக்கும் நுண்ணுயிரிகள்; பால் மற்றும் பாலிலா இனப்பெருக்கம்; விண்வெளிப்பொருள்கள், தீரக்கூடிய மற்றும் தீராத இயற்கை வளங்கள் போன்றவை.

**S-803** எளிய சோதனைகளைச் செய்து வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிதல், எ.கா., எரிதலுக்குத் துணைபுரியும் சூழல்கள் யாவை? ஊறுகாய் மற்றும் மிட்டாய்களில் உப்பு மற்றும் சர்க்கரையை நாம் ஏன் சேர்க்கிறோம்? சம ஆழத்தில் திரவங்கள் சம அழுத்தத்தைச் செலுத்துமா?

**S-804** செயல்கள் மற்றும் நிகழ்வுகளைக் காரணங்களோடு தொடர்புபடுத்துதல், எ.கா., காற்றில் மாசுப்பொருள்கள் நிறைந்திருக்கும்போது புகைப்பனி உருவாதல்; அமில மழையினால் நினைவுச் சின்னங்கள் பாழ்படுதல் போன்றவை.

**S-805** செயல்கள் மற்றும் நிகழ்வுகளை விளக்குதல், எ.கா., மனிதன் மற்றும் விலங்குகளின் இனப்பெருக்கம்; ஒலி உருவாதலும் பரவுதலும்; மின்னோட்டத்தின் வேதி விளைவுகள்; பன்முகப் பிம்பங்கள் உருவாக்கம்; தீச்சுடரின் அமைப்பு போன்றவை.

**S-806** வேதி வினைகளுக்கான சொற்சமன்பாடுகளை எழுதுதல், எ.கா., உலோகங்கள் மற்றும் அலோகங்கள் காற்று, நீர் மற்றும் அமிலங்களுடன் வினைபுரிதல் போன்றவை.

**S-807** படுகோணம், விலகுகோணம் போன்றவற்றை அளத்தல்.

**S-808** நுண்ணுயிரிகள்; வெங்காயத்தோல், மனிதர்களின் வாய்க்குழி செல்கள் போன்றவற்றின் நழுவம் தயாரித்து அவற்றின் நுண்பண்புகளை விளக்குதல்.

**S-809** பாகங்களுடன் படங்கள் / செயல் வரைபடங்கள் வரைதல், எ.கா., செல், கண், மனித இனப்பெருக்க உறுப்புகள்; பரிசோதனை வடிவமைப்புகள் போன்றவை.

**S-810** சுற்றுப்புறத்தில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி மாதிரிகளை உருவாக்கி அவை செயல்படும் விதத்தை விவரித்தல், எ.கா., ஒற்றைக் கம்பி இசைக் கருவி (தம்புரா), நிலை மின்காட்டி (எலக்ட்ராஸ்கோப்), தீயணைப்பான், போன்றவை.

**S-811** கற்றுக்கொண்ட அறிவியல் கருத்துகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல், எ.கா., நீர் சுத்திகரித்தல்; மட்கும் மற்றும் மட்கா கழிவுகளைப் பிரித்தெடுத்தல்; பயிர்ப்பெருக்க முறைகளைக் கையாளுதல்; பல்வேறு பயன்பாடுகளுக்கு ஏற்ற உலோகங்கள் மற்றும் அலோகங்களைப் பயன்படுத்துதல்; உராய்வை அதிகப்படுத்துதல் /குறைத்தல்; வளரிளம் பருவம் சார்ந்த தொன்மங்கள் மற்றும் சமூகப் பழக்கவழக்கங்களை சவால்களாக எதிர்கொள்ளல் போன்றவை.

**S-812** அறிவியல் கண்டுபிடிப்புகளின் கதைகள் குறித்துக் கலந்துரையாடல் மற்றும் போற்றுதல்.

**S-813** சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொள்ளல், எ.கா., வளங்களைத் தேவையான அளவில் பயன்படுத்துதல்; உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளைக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துதல்; சுற்றுச்சூழல் இன்னல்களை எதிர்கொள்ளும் வழிமுறைகளைப் பரிந்துரைத்தல் போன்றவை.

**S-814** கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி வடிவமைத்தல், திட்டமிடுதல் போன்றவற்றில் படைப்பாற்றலை வெளிப்படுத்துதல்.

**S-815** நேர்மை, புறவயத்தன்மை, ஒத்துழைப்பு, பயம் மற்றும் பாரபட்சம் கொள்ளாது இருத்தல் போன்ற விழுமங்களை வெளிப்படுத்துதல்.

## சமூக அறிவியல்

**SS-801** தொழிற்சாலையின் பல்வேறு வகைகளை அவற்றின் மூலப்பொருள்கள், அளவு மற்றும் உடைமை அடிப்படையில் வகைப்படுத்துதல்.

**SS-802** தன் சொந்தப் பகுதி / மாநிலத்தில் விளையும் முக்கியப் பயிர்கள் /வேளாண் வகைகள் மற்றும் விவசாய நடைமுறைகளை விவரித்தல்.

**SS-803** உலக வரைபடத்தைப் பயன்படுத்தி, சீரற்ற மக்கள்தொகைப் பரவலைக் கண்டுணர்ந்து விளக்குதல்.

**SS-804** காட்டுத்தீ, நிலச்சரிவு, தொழிற்சாலைகளில் ஏற்படும் பேரிடர்களுக்கான காரணங்கள் மற்றும் ஆபத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை விவரித்தல்.

**SS-805** உலக வரைபடத்தில் முக்கியக் கனிமவளங்களின் இருப்பிடங்களைக் கண்டறிதல் எ.கா. நிலக்கரி மற்றும் பெட்ரோலிய வயல்கள் உள்ள இடங்களை உலக வரைபடத்தில் குறித்தல்.

**SS-806** பூமியில் காணப்படும் இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களின் சீரற்ற பரவலைப் பகுத்தாய்தல்.

**SS-807** அனைத்துப் பகுதிகளிலும் வளர்ச்சியை நிலைநாட்ட இயற்கை வளங்களான நீர், மண், காடு போன்றவற்றை நியாயமான முறையில் பயன்படுத்துதலை நியாயப்படுத்துதல்.

**SS-808** முக்கியமான பயிர்கள் குறிப்பிட்ட இடத்தில் அதிகமாக விளைவதற்கான காரணிகளைப் பகுத்தாய்தல். எ.கா. கோதுமை, நெல், பருத்தி, சணல், மற்றும் பிற) மற்றும் அவற்றை விளைவிக்கும் நாடுகளை உலக வரைபடத்தில் குறித்தல்.

**SS-809** உலகில் பல பகுதிகளில் காணப்படும் பல்வேறு வகையான வேளாண்மை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பினைக் கண்டறிதல்.

**SS-810** பட்டை வரைபடம் மூலம் பல்வேறு நாடுகள் / இந்தியா / மாநிலங்களில் மக்கள் தொகையைக் காண்பித்தல், பல்வேறு சான்றுகளைப் பயன்படுத்தி பண்டைய இடைக்கால நவீன இந்தியாவை வேறுப டுத்துதல், இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்களையும் அவற்றின் முன்னேற்றங்களையும் விளக்குதல்.

**SS-811** ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம் எவ்வாறு ஆதிக்கம் மிக்க சக்தியாக மாறியது என்பதை விளக்குதல்.

**SS-812** "இண்டிகோ கிளர்ச்சி" போன்ற நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட காலனி ஆதிக்க விவசாயக் கொள்கைகளின் தாக்கத்தின் வேறுபாடுகளை விளக்குதல்.

**SS-813** 19 ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட பல்வேறு பழங்குடிச் சமுகங்களையும், சுற்றுப்புறத்தோடு அவர்களுக்கு இருந்த தொடர்பினையும் விவரித்தல்.

**SS-814** பழங்குடி சமூகத்தினருக்குக் காலனித்துவ நிருவாகக் கொள்கைகளை விவரித்தல்.

**SS-815** 1857 ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியின் தோற்றம், தன்மை, அது நாடெங்கும் பரவிய விதம், அதிலிருந்து நாம் பெற்ற அனுபவங்கள் பற்றி விளக்குதல்.

**SS-816** இந்தியாவில் காலனி ஆதிக்கக் காலத்தில் முன்னரே செயல்பட்டுக் கொண்டிருந்த நகர்ப்புற மையங்கள் மற்றும் கைவினைத் தொழிற்சாலைகளின் வீழ்ச்சியையும் புதிய நகர்ப்புற மையங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் வளர்ச்சியினையும் பகுப்பாய்வு செய்தல்.

**SS-817** இந்தியாவில் புதிய கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதைப் பற்றி விளக்குதல்.

**SS-818** சாதி, பெண்கள், விதவை மறுமணம், குழந்தைத் திருமணம், சமுதாயச் சீர்திருத்தங்கள் ஆகியவை தொடர்பான பிரச்சினைகளையும் இப்பிரச்சினைகளுக்குக் காலனி நிருவாகத்தின் கொள்கைகள் மற்றும் இயற்றப்பட்ட சட்டங்களைப் பகுப்பாய்வு செய்தல்.

**SS-819** நவீன காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பட்டியலிடுதல்.

**SS-820** 1870லிருந்து சுதந்தரம் அடையும்வரை நடைபெற்ற இந்திய தேசிய இயக்கத்தின் செயல்பாடுகளைப் பட்டியலிடுதல்.

**SS-821** நாட்டின் வளர்ச்சிச் செயல்பாட்டில் ஏற்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

**SS-822** இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கடமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் சார்ந்து ஒருவர் வாழும் பகுதியில் காணப்படும் சமூக அரசியல் பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகளுடன் பொருளுணர்தல் .

**SS-823** ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அடிப்படை உரிமைகளின் அறிவைப் பயன்படுத்தி அவற்றின் உரிமைமீறல்கள், பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டினைக் கண்டறிதல்.(எ.கா) குழந்தை உரிமைகள்.

**SS-824** மத்திய மற்றும் மாநில அரசுகளை வேறுபடுத்துதல்.

**SS-825** மக்களவைக்கான தேர்தல் நடைமுறையைப் பற்றி விளக்குதல்.

**SS-826** மாநில / யூனியன் பிரதேச மக்களவை வரைபடத்தில் தன் சொந்தத் தொகுதியை அடையாளம் கண்டு அத்தொகுதியின் மக்களவை உறுப்பினரின் பெயரைக் கூறுதல்.

**SS-827** சட்டம் இயற்றுதலில் உள்ள செயல்முறைகளை விவரித்தல். (எ.கா. குடும்ப வன்முறைச் சட்டம், தகவல் உரிமைச் சட்டம், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்)

**SS-828** இந்தியாவில் நீதித்துறையின் செயல்பாடுகளைக் குறிப்பிடத்தக்க சில முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளை மேற்கோள்காட்டி விவரித்தல்.

**SS-829** முதல் தகவல் அறிக்கையினைப் பதிவு செய்யும் முறையினைச் செய்து காட்டுதல்.

**SS-830** ஒருவரின் சொந்தப் பகுதியில் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் சந்திக்கும் நியாயமற்ற செயல்பாடுகளின் காரணங்களையும் விளைவுகளையும் பகுப்பாய்வு செய்தல்.

**SS-831** நீர், சுகாதாரம், சாலை, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை மக்களுக்கு வழங்குவதில் அரசாங்கத்தின் பங்கைக் கண்டறிந்து அவை மக்களுக்கு முறையாகக் கிடைக்கிறதா என்று கண்டறிதல்.

**SS-832** பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கத்தின்பங்களிப்பினை விளக்குதல்.

ஆக்கம் : D.LAKSHMIGANDHAN, BT (MATHS), PUMS-RADHAPURAM, THANDARAMPET BLOCK, TIRUVANNAMALAI Dt .